# BEARDSELL LIMITED

# TRINITY MIRROR 10-09-2020

# Beardsell Limited

CIN No.L65991TN1936PLC001428
Registered Office : 47 Greames Road, Chennai – 600 006
Website : www.beardsell.co.in

## NOTICE OF ANNUAL GENERAL MEETING AND RELATED MATTERS

Notice is hereby given that the Eighty third Annual General Meeting (AGM) of the Company will be held on **Wednesday, the 30th September 2020 at 10.00 am.** (IST) through Video Conferencing (VC) / Other Audio Visual Means (OAVM) to transact the Ordinary and Special Businesses as set out in the Notice of the said meeting.

The Annual Report for the year 2019-20 together with the Notice of the AGM will be sent on or before 8th September 2020 only by electronic means to those shareholders who have registered their e-mail ids with the Company or as the case may be, the depository Participants. These are also made available in the Websites of the Company and the Stock Exchanges viz., www.beardsell.co.in, www.bseindia.com, www.nseindia.com

- Due to the current pandemic situation, in order to ensure safety of all concerned, investors are requested to submit their requests online or through e-mails and as far as possible avoid handling of physical documents.
- You may visit https://investors.cameoindia.com and follow the guidance for submission of the information online for registering the e-mail, mobile number and other details, etc.,

**FACILITY TO PARTICIPATE IN THE AGM THROUGH VC / OAVM AND SPEAK THEREAT :**

Shareholders will be provided with a facility to attend the AGM through VC / OAVM through the CDSL E-Voting system. Detailed guidance for joining the meeting is available in the Notice of the Meeting. The window for joining the meeting would be available from 9.45 am on the AGM day.

In terms of the relevant Circulars of the Ministry of Corporate Affairs there is no provision for appointment of proxies for the meeting.

Members desirous of speaking at the meeting may register through the web portal of the Registrar & Transfer Agent M/s Cameo Corporate Services Limited via https://Investors.cameoindia.com.

The above facility for participant registration will be open from 9.00 am on 25th September 2020 to 5.00 pm on 28th September 2020. It may please be noted that there will be no option for spot registration and so only those shareholders who have registered through the above process will be able to speak at the meeting.

Members who do not wish to speak during the AGM but need clarifications on the items to be transacted at the meeting may send their queries by e-mail to cs@beardsell.co.in on or before 28th September 2020, mentioning their Names, Demat Account Number / Folio Number, E-mail ID and Mobile Number. These queries will be replied to by the Company suitably by email.

**BOOK CLOSURE :**

Pursuant to Section 91 of the Companies Act 2013, notice is hereby given that the Register of Members and Share Transfer Books of the Company will remain closed from 24th September, 2020 to 30th September, 2020 (both the days inclusive).

Record Date : 23rd September, 2020.

**DECLARATION & PAYMENT OF DIVIDEND FOR THE YEAR 2019-20 :**

The dividend for the year 2019-20 upon declaration at the AGM, will be paid on or before 29th October, 2020 whose name appears in the register of Members on 23rd September, 2020. Information received thereafter may not be considered by the RTA. Where bank account details are not registered, dividend will be paid through warrants. Owing to the current pandemic situation, there could be delays in receipt of the warrants and so to avoid the same, Members may register their bank mandates well in advance. It may also be noted that the payment of dividend for the FY 2019-20 will be subject to TDS. Resident Individuals can furnish Form 15G/15H if Tax is not to be deducted. For detailed information please refer to the notice of the meeting.

**FACILITY FOR REMOTE E-VOTING :**

Pursuant to Section 108 of the Companies Act, 2013, the relevant Rules and Regulation 44 of SEBI (Listing Obligations & Disclosure Requirements) Regulations, 2015 the Company has entered in to an agreement with Central Depository Services (India) Limited (CDSL) to facilitate the Members to exercise their right to vote at the meeting through remote E-voting.

The detailed process for participating in AGM through VC / OAVM and in the remote E-voting is available in the notice of the meeting.

Members of the Company holding shares in either physical or dematerialized form as on 23rd September 2020 being the Cut-Off Date and whose names are entered as Members in the Register of Members or in the Register of Beneficial Owners by the Depositories on that date alone shall be entitled to exercise the voting rights electronically.

Persons who have acquired shares and become Members of the Company after the dispatch of the notice and hold shares as on the Cut-off date may contact the RTA to obtain the login details if they desire to participate through VC / OAVM and to avail remote E-voting facility.

The remote E-voting period commences on Sunday, 27th September 2020 at 9.00 am and will end on Tuesday, the 29th September 2020 at 5.00 pm during which period the Members can cast their vote electronically. The remote E-voting module shall be disabled by CDSL and will not be available thereafter. Members who did not avail remote E-voting facility will be provided an opportunity to vote electronically at the meeting. Members who have exercised remote e-voting are entitled to attend the meeting but shall not be permitted to vote.

The results of the E-voting will be declared as stipulated under the relevant Rules and will also be posted on the Company's Website and the website of CDSL.

**CONTACT DETAILS FOR FURTHER INFORMATION :**

In case you have any queries or issues regarding E-voting, you may refer the Frequently Asked Questions ("FAQs") and E-voting manual available at www.evotingindia.com, under help section or write an email to helpdesk.evoting@cdslindia.com or call 1800225533. If you have any queries or issues regarding attending AGM & e-Voting from the e-Voting System, you may refer the Frequently Asked Questions ("FAQs") and E-voting manual available at www.evotingindia.com, under help section or write an email to helpdesk.evoting@cdslindia.com

For BEARDSELL LIMITED
T Anantha Jothi
Company Secretary

Place : Chennai
Date : 7th September, 2020

# BEARDSELL LIMITED

# MAKKAL KURAL 10-09-2020

# பியர்ட்ஸெல் லிமிடெட்

**CIN :L65991TN1936PLC001428**

பதிவு அலுவலகம் : 47, கிரீம்ஸ் சாலை, சென்னை - 600 006.

இணையதளம் : www.beardsell.co.in

## ஆண்டு பேரவைக் கூட்டம் மற்றும் இதர விபரங்கள் குறித்த அறிவிப்பு

நிறுவனத்தின் 83வது ஆண்டுப் பேரவைக் கூட்டம், **செப்டம்பர் 30ம் தேதி புதன்கிழமை அன்று காலை 10 மணிக்கு** (இந்திய நேரப்படி) காணொலிக் காட்சி மூலம் நடைபெறும். இக்கூட்டத்தில் கூட்ட அறிவிக்கையில் கண்டுள்ள சாதாரண மற்றும் சிறப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்படும்.

மேற்படி கூட்ட அறிவிக்கையும், 2019-20 ஆண்டறிக்கையும் தத்தம் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வரும் 08.09.2020 அன்றோ அல்லது அதற்கு முன்போ மின்னணு முறையில் மட்டுமே அனுப்பப்படுகிறது. இவை நிறுவனத்தின் மற்றும் பங்குச் சந்தைகளின் வலைத்தளங்களில் கிடைக்கப்பெறும். www.beardsell.co.in மற்றும் www.bseindia.com & www.nseindia.com

- ❖ தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, பங்குதாரர்கள் கூடுமானவரையில் விண்ணப்பங்களையும், ஆவணங்களையும் நேரடியாக அனுப்பாமல் மின்னணு மூலம் பரிமாற்றம் செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
- ❖ மேற்சொன்ன அறிவிக்கைகளைப் பெற, தங்கள் மின்னஞ்சல் முகவரி, கைபேசி எண் மற்றும் இதர விபரங்களை நிறுவனத்தின் பதிவாளர் & பங்கு மாற்ற முகவர் கேமியோ கார்ப்பொரேட் சர்வீசஸ் லிமிடெட்டின் https://investors.cameoindia.com என்ற இணையதள இணைப்பில் கேட்கப்படும் விபரங்களை உள்ளிட்டு பதிவு செய்து கொள்ளலாம்.

**பேரவைக் கூட்டத்தில் பங்கேற்கவும், பேசுவதற்கானவும் முறை :**

பேரவைக்கூட்ட காணொலிக் காட்சி சென்ட்ரல் டெபாசிடரி சர்வீஸஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தின் இ-வோட்டிங்க் அமைப்பின் மூலம் நடைபெறும். கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான வசதி அன்று காலை 9.45 மணி முதல் இருக்கும். இதன் வழிமுறைகள் அறிவிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

கார்பொரேட் விவகாரங்கள் அமைச்சகம் வெளியிட்டுள்ள பொதுச் சுற்றறிக்கைகள்படி கூட்டத்தில் பங்கு கொள்ள பதிலிகளை நியமிக்க முடியாது. உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

கூட்டத்தில் பேசிட விரும்புவோர், காமியோ கார்புரேட் நிறுவனத்தின் வலைதளம் https://investors.cameoindia.com மூலம் 25.09.2020 காலை 9.00 மணி முதல் 28.09.2020 மாலை 5.00 மணிக்குள் பதிவு செய்து கொள்ளலாம். கூட்டம் நடைபெறும் போது பதிவு செய்து கொண்டு பேச வசதி இருக்காது.

கூட்டத்தில் பேச விரும்பாத, ஆனால் எடுத்துக் கொள்ளப்பட உள்ள அலுவல்கள் குறித்து விபரம் வேண்டுவோர் தங்கள் வினாக்களை மின்னஞ்சல் மூலம் cs@beardsell.co.in என்ற முகவரிக்கு தங்கள் பெயர், பங்கு விபரங்கள், கைபேசி எண் பற்றிய விபரங்களுடன் 28.09.2020க்கு முன்னர் அனுப்பி வைக்கலாம். விளக்கங்கள் உரிய முறையில் அனுப்பி வைக்கப்படும்.

**பங்குப்பதிவு முடக்ககாலம் :**

உறுப்பினர் பதிவேடு மற்றும் பங்குப் பதிவுப் புத்தகங்கள் 24.09.2020 முதல் 30.09.2020 முடிய முடங்கி இருக்கும் என கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 91ன்படி இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**2019-20 ஆண்டுக்கரன ஈவுத்தொகை :**

ஈவுத்தொகையானது செப்டம்பர் 23ம் தேதி அன்று வர்த்தக முடிவு நேரத்தில் பயனாளிகள் பட்டியலில் உள்ள பங்குதாரர்கள் மற்றும் உறுப்பினர் பதிவேட்டில் உள்ள பங்குதாரர்களுக்கு அக்டோபர் 29ம் தேதி அன்றோ அதற்கு முன்போ செலுத்தப்படும்.

ஈவுத்தொகையை மின்னணு பரிமாற்றமாகப் பெற விரும்பும் உறுப்பினர்கள் தங்கள் வங்கிக்கணக்கு விபரங்களை மின்னணு முறையில் பங்குகளை உடையவர்கள் 23.09.2020க்கு முன் டெபாசிடரி பார்டிசிபண்டிடமும் ஏனைய பங்குதாரர்கள் 29.10.2020க்கு முன் கேமியோ நிறுவனத்திடமும் பதிவு செய்து கொள்ளலாம். வங்கிக்கணக்கு பதிவு செய்யாத பங்குதாரர்களின் ஈவுத்தொகை ஆணைப்பத்திரங்கள் மூலம் அனுப்பி வைக்கப்படும். தற்போதைய சூழ்நிலையால், இதில் தாமதங்கள் ஏற்படலாம். ஆகவே அனைத்துப் பங்குதாரர்களுக்கும் தத்தம் வங்கிக் கணக்கு விபரங்களை உடனடியாக பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், மேற்படி ஈவுத்தொகையிலிருந்து வருமான வரிப் பிடித்தம் செய்யப்படும். இதைத் தவிர்க்க விரும்புவோர், வருமான வரி விதிகளின்படி Form 15G / 15H சமர்ப்பிக்கலாம். இது குறித்த மேல் விபரங்களுக்கு கூட்ட அறிவிக்கையைப் பார்க்கவும்.

**கூட்டத்திற்கு முன் மின்னணு வாக்குப்பதிவு :**

கம்பெனிச் சட்டப் பிரிவு 108 மற்றும் அதன் கீழான விதிமுறைகள் மற்றும் செபி (பட்டியல் கடமைகள் & வெளியீட்டுத் தேவைகள்) கட்டுபாடுகள் 2015ன் 44ம் கூற்றின்படி உறுப்பினர்கள் பேரவை கூட்டத்தின் நடவடிக்கைகள் மீது தொலை மின்னணு வாக்குப்பதிவு செய்திட சென்ட்ரல் டெபாசிடரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) நிறுவனத்துடன் ஓர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொலை மின்னணு வாக்குப்பதிவு செய்வதற்கான முறைகள் கூட்ட அறிவிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. செப்டம்பர் 23, 2020 (தகுதி நாள்) அன்று நிறுவனத்தின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் மட்டுமே தொலை மின்னணு அல்லது பேரவைக் கூட்ட இடத்தில் வாக்கெடுப்பில் பங்கு கொள்ளலாம். கூட்ட அறிவிக்கை CDSL மற்றும் பங்குச் சந்தைகளின் வலைதளங்களான www.cdslindia.com, www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் பதிவேற்றப்பட்டுள்ளது.

ஆண்டறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டபின் தகுதி நாளுக்கு முன் உறுப்பினரான நபர்கள் ஆண்டறிக்கையை இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது கேமியோவை தொடர்பு கொள்ளலாம். மேற்படி நபர்கள் தொலைதூர மின்னணு வாக்களிக்க விரும்பினால், புகுபதிகை விவரங்களை கேமியோவிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

உறுப்பினர்கள் CDSL-ல் முன்னரே மின்னணு வாக்களிக்கப் பதிவு செய்திருந்தால் அதே புகுபதிகை விவரங்களைக் கொண்டு வாக்களிக்கலாம். உறுப்பினர்கள் CDSL-ன் m-voting செயலியை தங்கள் கைபேசியில் பதிவிறக்கம் செய்து கைபேசி மூலம் வாக்களிக்கலாம்.

செப்டம்பர் 27, 2020 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் செப்டம்பர் 29, 2020 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி (இந்திய நேரப்படி) முடிய மின்னணு வாக்குப்பதிவு செய்யலாம். இதன் பிறகு மின்னணு வாக்குப்பதிவு செய்திடும் வசதி இருக்காது. மின்னணு வாக்களிக்காத உறுப்பினர்கள் கூட்ட இடத்தில் வாக்களிக்கலாம். மின்னணு முறையில் வாக்களித்தவர்கள் பேரவை கூட்டத்தில் பங்கு கொள்ளலாம் ஆனால் வாக்களிக்க முடியாது.

வாக்கு முடிவகள் விதிகளில் குறிப்பிட்டவாறு அறிவிக்கப்படும் மற்றும் நிறுவனம் மற்றும் CDSL இணையதளங்களில் வெளியிடப்படும்.

**மேலும் விளக்கங்கள் பெற :**

மின்னணு வாக்குப்பதிவு மற்றும் காணொளி மூலம் கூட்டத்தில் பங்கு கொள்ளுதல் மீதான சந்தேக விளக்கம் பெற உறுப்பினர்கள் CDSL-ன் இணையதளத்தில் (www.evotingindia.com) உள்ள கையேட்டையோ, சந்தேக விளக்க வினா விடைகளையோ பார்க்கலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம். உதவி மையம் : 1800225533 மின்னஞ்சல் : helpdesk.evoting@cdslindia.com அல்லது இவ்வறிக்கையில் கையெழுத்திட்டவரையோ தொடர்பு கொள்ளலாம்.

பியர்ட்ஸெல் லிமிடெட்டுக்காக
T ஆனந்த ஜோதி
கம்பெனி செயலாளர்

இடம் : சென்னை
தேதி : 7 செப்டெம்பர், 2020